களஞ்சியம் - சர்வதேச தமிழ் ஆய்விதழ்
KALANJIYAM International Journal of Tamil Studies

# தொல்காப்பிய வண்ணக்கோட்பாடு நோக்கில் குறுந்தொகை

***ச.காவியா***, *முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி, பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.*

***முனைவர் சு.செல்வக்குமார்***, *உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி, பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.*

**ஆய்வுச்சுருக்கம்**

தொல்காப்பியர் கூறும்வண்ணம் என்பது ஒலியமைப்பைச் சார்ந்து இருக்கக்கூடிய செய்யுள் உறுப்புகளில் ஒன்றாகும். பல உரையாசிரியர்கள் இதற்கான விளக்கம் மற்றும் வேறுபாடுகளைக் குறிப்பிடுகிறார்கள். தொல்காப்பியர் தனது நூலில் வண்ணங்களை 26ஆவது செய்யுள் உறுப்பாகக் குறிப்பிட்டுள்ளார். வண்ணங்கள் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாக குறுந்தொகைப் பாடல்களில் அமைந்துள்ள விதத்தினை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

**முன்னுரை**

பழந்தமிழ் நாட்டில் முதல், இடை, கடைச்சங்கம் என மூன்று சங்கங்கள் இருந்தன. கடைச்சங்க காலத்தில் தோன்றியவை எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் ஆகும். இவையே சங்க இலக்கிய நூல்களாகக் கருதப்படுகின்றன. சங்க இலக்கியம் ஏறத்தாழ

இரண்டாயிரம் ஆண்டுகாலத் தொன்மையுடையது. அது அக்கால மக்களின் வாழ்க்கைச் சூழலை வெளிப்படுத்துவதோடு அகம், புறம் என்ற இருபெரும் பிரிவுகளில் காதல், வீரம், அரசியல், வரலாறு போன்ற செய்திகளையும் தெரிவிப்பதாக அமைந்துள்ளது. அவ்வாறு பொருள் நோக்கில் தொகுக்கப்பட்டுள்ளனவற்றைத் "*தொகை*" எனவும், நீண்ட பாடல்களாக உள்ளவற்றைப் "*பாட்டு*" எனவும் வகைப்படுத்தினர். இவையே எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் ஆகும். இந்நூல்கள் தமிழ்ச் சமுதாயத்தின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் பிரதிபலிப்பனவாக அமைந்துள்ளன. சங்க இலக்கிய நூலான குறுந்தொகை பல்வேறு காலங்களில் வாழ்ந்த பல்வேறு புலவர்களால் பாடப்பட்டது. தொல்காப்பியம் பழைய இலக்கண நூலாகும். மிகப் பழமையான நூலாக இருந்தாலும், இன்று வரை தமிழ் இலக்கண விதிகளுக்கு அடிப்படையான நூலாக அமைந்துள்ளது. செய்யுளியல் உறுப்புகளில் இடம்பெறும் வண்ணங்கள் குறுந்தொகையில் அமைந்துள்ள தன்மையை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**வண்ணமும் வகையும்**

ஒரு பெண் கண்களுக்கு மை தீட்டி அழகுபடுத்துவது போல ஒரு பாடலுக்கு ஓசை - வண்ணம் தான் அழகுபடுத்துகிறது. தொல்காப்பியர் கூறும் செய்யுள் உறுப்புகள் முப்பத்தி நான்கனுள் வண்ணமும் ஒரு உறுப்பாகும். அவ்வண்ணத்தை இருபது வகைகளாகப் பிரித்துள்ளனர். இது ஒலியமைப்பினைச் சார்ந்து வரக்கூடிய செய்யுள் உறுப்புகளில் ஒன்று ஆகும். இதனைப் பேராசிரியர் "*சந்த வேறுபாடு*" என்று குறிப்பிடுகிறார். (தொல்காப்பியம் - செய்யுள் - உரைவளம் ப.789) தமிழ் அகராதியில் வண்ணம் என்பதற்கு "*அழகு, சந்தம், துடி, வகை, செயல், பூசுதல், நிறம், இசைப்பாட்டு, வடிவு, விதம், ஒப்பனை, குணம்*" (ப.361) என்று பொருள் கொள்ளப்படுகிறது. "*சந்தக் கூறுபாடே வண்ணம்*" (தொல்காப்பியம்

செய்யுள் உரைவளம் - பக் - 788) என நச்சினார்க்கினியரும் கூறுகின்றார். தொல்காப்பியர் வண்ணத்தை வரையறுக்கவில்லை. ஆனால் வகைப்படுத்தியுள்ளார்.

**"வண்ணம் தாமே நாலைந் தென்ப" (தொல்:513)**

என்ற நூற்பாவில் இருபது வகைப்படும் வண்ணம் என்பதை அவை,

**"அவை தாம் பாஅவண்ணம் பாஅ வண்ணம்**
**வல்லிசை வண்ணம் மெல்லிசை வண்ணம்**
**இயைபு வண்ணம் அளபெடை வண்ணம்**
**நெடுஞ்சீர் வண்ணம் குறுஞ்சீர் வண்ணம்**
**சித்திர வண்ணம் நலிபு வண்ணம்**
**அகப்பாட்டு வண்ணம் புறப்பாட்டு வண்ணம்**
**ஒழுகு வண்ணம் ஒரூஉ வண்ணம்**
**எண்ணு வண்ணம் அகைப்பு வண்ணம்**
**தூங்கல் வண்ணம் ஏந்தல் வண்ணம்**
**உருட்டு வண்ணம் முடுகு வண்ணமென்று**
**ஆங்கென மொழிப அறிந்திசி னோரே" (தொல்:514)**

என்பனவாகும்.

**தாஅ வண்ணம்**

தாஅ வண்ணம் என்பது முதல் அடியும் மூன்றாம் அடியும் எதுகையில் அமைவதாகும். இதை, இளம்பூரணனார் *"இடையிட்ட எதுகை தான் தாஅ வண்ணம்"* என்கிறார். (தொல்காப்பியம் செய்யுளியல் உரைவளம் பக் - 792)

**"இடையிட்டு வந்த எதுகைத் தாகும்" (தொல்:516)**

என்ற நூற்பாவில் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

சான்றாக குறுந்தொகையில்,

**"பெருந்தேன் கண்ட இருங்கால் முடவன்" (குறுந்:60:2)**

என்ற அடியில் பெருந்தேன், இருங்கால் என்ற சொற்களில் உள்ள 'ரு' என்பது இடையிட்டு வந்த எதுகையாக அமைந்துள்ளது. மேலும்,

**"மடவ மன்ற தடவுநிலைக் கொன்றை" (குறுந்:66:1)**

**"இளவை பாரார் வளம்நசைஇச் சென்றோர்**
**இவணும் வாரார் எவணரோ" (குறுந்:126:1-2)**

**"வளைவாய்ச் சிறுகிளி விளை தினைக் கடீஇயர்**
**நெடுங்கை வன்மான் கடும்பகை உழந்த" (குறுந்:141:1-4)**

**"குருந்தொடு அலம்வரும் பெருந்தேன் காலையும்**
**கனவோ மற்றுஇது வினவுதல் யானே" (குறுந்:148:4-6)**

இப்பாடல்களிலும் இடையிட்டு வந்த எதுகை அமைந்துள்ளதைக் காணமுடிகிறது. இவ்வாறாக ஒரு செய்யுளில் ஒருசீர் இடையிட்டு வரும் எதுகையே தாஅ வண்ணம் என்பதை அறியமுடிகிறது.

**வல்லிசை வண்ணம்**

வல்லிசை எழுத்துக்களான க, ச, ட, த, ப, ற என்ற எழுத்துக்கள் பாடல் அடிகளில் மிகுந்து காணப்பட்டால் அது வல்லிசை வண்ணமாகும். இதை, பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் *"வல்லிசை – வல்லோசை"* ஒலி என்றும், *"வல்லெழுத்து பயிலும்"* என்றும் குறிப்பிடுப்பிடுகின்றார். இதை,

**"வல்லிசை வண்ணம் வல்லெழுத்து மிகுமே" (தொல்:517)**

என்ற நூற்பாவில் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

**"செங்களம் படக்கொன்று அவுணர்த் தேய்த்த**
**செங்கோல் அம்பின், செங்கோட்டு யானை**
**கழல் கொடி, சேஎய் குன்றம்**
**குருதிப் பூவின் குலைக் காந்தட்டே" (குறுந்:1)**

என்ற பாடல் அடிகளில் செங்களம் என்ற ஒற்றைச் சொல்லிலும் கூட இரண்டு வல்லின எழுத்துக்கள் (க,ச) வந்துள்ளன. இவ்வாறு ஒரே அடியில் அதிகளவில் வல்லெழுத்துக்கள் வந்துள்ளதால் அது வல்லிசை வண்ணம் ஆகும். மேலும்,

**"கருங்கோற் குறிஞ்சிப் பூக் கொண்டு**
**பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே" (குறுந்:3:3-4)**

**“பெரும்பெயல் உழந்த இரும்பிணர்த் துறுகல்" (குறுந்:13:2)**

என்ற இப்பாடல்கள் முழுவதிலும் வல்லெழுத்துக்கள் நிறைந்துள்ளதைக் காணமுடிகிறது.

**மெல்லிசை வண்ணம்**

மெல்லோசையினையுடைய ங, ஞ, ண, ந, ம, ன என்னும் மெல்லெழுத்துக்கள் அதிக அளவு பாடலில் பயின்று வந்தால், அது மெல்லிசை வண்ணமாகும். இதனையே, இளம்பூரணனார் *“மெல்லெழுத்து மிக்கு வருவது மெல்லிசை வண்ணமாகும்"* என்று குறிப்பிடுகிறார். *“ஒரு செய்யுளில் ஓரின எழுத்தே பயின்று உறுப்பெனப்பட்டு இடையிட்டு வருதலும் மெல்லிசை வண்ணமாகும்"* (தொல்காப்பியம் செய்யுளியல் உரைவளம் - பக்-794) என்று பேராசிரியர் குறிப்பிடுகிறார்.

**“மெல்லிசை வண்ணம் மெல்லெழுத்து மிகுமே" (தொல்:518)**

என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

**“இனிது அடங்கினரே,மாக்கள்;முடிவு இன்று**
**நனந்தலை உலகமும் துஞ்சும்" (குறுந்:6:2-3)**

என்ற வரிகளில் இனிது, மாக்கள் என்ற சொல்லில் ன,ம என்ற மெல்லின எழுத்துக்கள் வந்தும்,ஒரே அடியில் மீண்டும் வந்ததால், இது மெல்லிசை வண்ணமாயிற்று. மேலும்,

**“முன்றில் உணங்கள் மாந்தி, மன்றத்து" (குறுந்:46:3)**
**“நல்லை அல்லை - நெடுவன் நிலவே" (குறுந்:47:4)**
**“நல் நலம் தொலைய, நலம் மிகச் சாஅய்" (குறுந்:93:1)**

என்ற பாடல்களில் மெல்லிசை வண்ணம் பயின்று வந்துள்ளதைக் காணமுடிகிறது.

**இயைபு வண்ணம்**

இயைபு வண்ணம் என்பது இடையின எழுத்துக்களான ய, ர ,ல, வ, ழ, ள போன்றவைகள் மிகுந்து காணப்பட்டால் அது இயைபு வண்ணமாகும். இளம்பூரணனார் *“வல்லோசை, மெல்லோசை இரண்டிற்கும் இடை*

*நிகர்ந்த ஓசையைப் பெற்று வருவது இயைபு வண்ணமாகும்"* (தொல்காப்பியம் செய்யுளியல் உரைவளம் பக்-795) என்று குறிப்பிடுகிறார். இதை,

**“இயைபு வண்ணம் இடையெழுத்து மிகுமே" (தொல்:519)**

என்ற நூற்பாவில் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

**“வில்லோன் காலனை வில்லோன்,தொடியோன்**
**மெல்லடி மேலவும் சிலம்பே; நல்லோர்" (குறுந்:7:1-2)**

என்ற பாடல் வரிகள் வில்லோன், தொடியோன் (ழ,ல,ள) எழுத்துக்கள் மிகுதயாக வந்துள்ளதைக் காணமுடிகிறது. இதேபோல,

**“வாள்முகம் துமிப்ப வள்இதழ் குறைந்த" (குறுந்:227:2)**

**“வேங்கை வீயா மென்சினை வீஉக,யானை" (குறுந்:247:5-6)**

**“ஓரூர் வாழினும் சேரி வாரார்**
**சேரி வரினும் ஆர முயங்கார்" (குறுந்:231:1-2)**

என்ற பாடல் அடிகளில் இடையின எழுத்துக்கள் அதிகமாக பயின்று வந்துள்ளதால், இவை இயைபு வண்ணமாகும்.

**நெடுஞ்சீர் வண்ணம்**

நெடில் எழுத்துக்களான ஆ ,ஈ, ஊ ,ஏ ,ஐ, ஓ, ஔ என்ற எழும் பாடலில் நீண்டு ஒலித்தல் நெடுஞ்சீர் வண்ணமாகும். இதை, இளம்பூரணனார், பேராசிரியர், நச்சினார்க்கினியர் போன்றோர் *“நெட்டெழுத்து பயின்று வருவது நெடுஞ்சீர் வண்ணமாகும்"* (தொல்காப்பியம் செய்யுளியல் உரைவளம் பக்-798 ) என்று குறிப்பிடுகிறார். மேலும்,

**“ஊதை தூற்றும் கூதிர் யாமத்து" (குறுந்:86:4)**

**“நோயினும் நோய் ஆகின்றே - கூவற்" (குறுந்:224:3)**

என்ற பாடல் வரிகளிலுள்ள சீர்களின் முதலெழுத்தான (ஊ, தூ, கூ, யா) என்ற நெடில் எழுத்துக்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. மேலும்,

**“வைகா வைகல் வைகவும் வாரார்" (குறுந்:285:1)**

**“தேரோன் போகிய கானலானே" (குறுந்:227:4)**

**“வாள் போல் வாய கொழுமடற் தாழை**
**மாலை வேல் நாட்டு வேலி ஆகும்" (குறுந்: 245:2-3)**

இப்பாடல்களிலும் நெட்டெழுத்துக்கள் மிகுதியாகப் பயின்று வந்துள்ளதைக் காணமுடிகிறது.

**குறுஞ்சீர் வண்ணம்**

குறுகிய ஓசை உடைய அ, இ, உ, எ, ஒ என்னும் குறில் எழுத்துக்கள் மிகுந்து வந்தால், அது குறுஞ்சீர் வண்ணமாகும். பேராசிரியர் குறுஞ்சீர் வண்ணம் என்பது *“குற்றெழுத்து பயில்வது"* என்றும், இளம்பூரணனார் மற்றும் நச்சினார்க்கினியர் *“குற்றெழுத்து மிக்கு வருவது"* என்றும் குறிப்பிடுகின்றனர். இதை,

**“குறுஞ்சீர் வண்ணம் குற்றெழுத்துப் பயிலும்" (தொல்:522)**

என்ற நூற்பாவில் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். குறுந்தொகையில்,

**“இல்இறைப் பள்ளித்தம் பிள்ளையொடு வதியும்**
**புன்கண் மாலையும், புலம்பும்" (குறுந்:46:5-6)**

என்ற இப்பாடலில் பெரும்பான்மையாக குறிலெழுத்துக்கள் பயின்று வந்துள்ளதைக் காணமுடிகிறது. மேலும்,

**“மல்லல் ஊரன், ‘எல்லினன் பெரிது’ என**
**மறுவரும் சிறுவன் தாயே**
**தெறுவது அம்ம, இத்திணைப் பிறத்தல்லே" (குறுந்:45:3-4)**

**“இரும்புலிக் குருளையின் தோன்றும் காட்டிடை**
**எல்லி வருநர் களவிற்கு**
**நல்லை அல்லை - நெடுவெண் நிலவே" (குறுந்:47:2-3)**

என்ற ஒவ்வொரு அடிகளிலும் அ, இ, உ என்னும் ஓசையை ஒலிக்கும் குறில் எழுத்துக்கள் அதிகமாகப் பயின்று வந்துள்ளதால், இது குறுஞ்சீர் வண்ணமாகும்.

**சித்திர வண்ணம்**

நெட்டெழுத்து, குற்றெழுத்து சமமாக சேர்ந்து வருவது சித்திர வண்ணமாகும். நச்சினார்க்கினியர் "சித்திரம் – ஓவியம்|; ஓவியம் போன்று பல வண்ணங்கள் பொருந்தி வருவதால், இது சித்திர வண்ணமாயிற்று"| என்று குறிப்பிடுகிறார். இதை,

**"நெடியவும் குறியவும் நேர்ந்துடன் வருமே" (தொல்:523)**

என்றது தொல்காப்பியம். சான்றாக குறுந்தொகையில்,

**"நோமென் நெஞ்சே நோமென் நெஞ்சே" (குறுந்:202)**

**"வேம்பின் பைங்காயென் தோழி தரினே" (குறுந்:196)**

என்ற அடிகளில் குறில், நெடில் எழுத்துக்கள் சமமான நிலையில் சேர்ந்து சித்திர வண்ணமாக விளங்குகிறது.

**நலிபு வண்ணம்**

ஆய்த எழுத்துக்கள் பயின்று வருவது நலிபு வண்ணமாகும். இது அடிவயிற்றிலிருந்து பிறக்கும் ஒலியாகும். இதை,

**"நலிபு வண்ணம் ஆய்த பயிலும்" (தொல்:524)**

என்ற நூற்பாவில் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். குறுந்தொகையில்,

**"யானே ஈண்டையேனே; என் நலனே**
**ஆனே நோயோடு காலஃதே,**
**துறைவன் தம் ஊரானே,**
**மறை அலர்ஆகி மன்றத்தஃதே" (குறுந்:97:1-4)**

என்ற பாடல் அடிகளில் காலஃதே, மன்றத்தஃதே ஆகிய சொற்களில் ஆய்த எழுத்து பயின்று வந்துள்ளதைக் காணமுடிகிறது.

இளம்பூரணனாரும், பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் *"ஆய்த எழுத்து பயின்று வருவது நலிபு வண்ணமாகும்"* என்றே குறிப்பிடுகின்றார்கள். மேலும்,

**"யார்அஃது அறிந்திசினோரே - சாரல்" (குறுந்:18:3)**

**"எஃகு விளங்கு தடக்கை மலையன் கானத்து" (குறுந்:198:6)**

**"பெருந்தண் வாடையும் வாரார்**

**இஃதோ - தோழி! நம் காதல் வரவே" (குறுந்:60:5-6)**

**“யாம் அஃது அயர்கம் சோறும்; தான் அஃது**
**அஞ்சுவது உடையள் ஆயின், வெம்போர்" (குறுந்:80:3-4)**

**“விழவொடு வருதி, நீயே! இஃதோ**
**ஓர்அன் வல்சிச் சீர்இல் வாழ்க்கை" (குறுந்:295:3-4)**

என்ற அடிகளில் ஃ என்ற ஆய்த எழுத்து பயின்று நலிபு வண்ணமானதைக் காணமுடிகிறது.

**ஏந்தல் வண்ணம்**

ஏந்தல் வண்ணம் என்பது ஒரு அடியில் சொன்ன சொல்லே திரும்ப வருதலும், மிகுந்து நிற்பதும் ஆகும். இதை,

**“சொல்லிய சொல்லிற் சொல்லியது சிறக்கும்" (தொல்:532)**

என்றது தொல்காப்பியம். சான்றாக குறுந்தொகையில்,

**“நோம் என்நெஞ்சே! நோம் என்நெஞ்சே!**
**இமை தீய்ப்பன்ன கண்ணீர் தாங்கி,**
**அமைதற்கு அமைந்த நம் காதலர்,**
**அமைவு இலர் ஆகுதல் நோம்என் நெஞ்சே!" (குறுந்:4)**

என்ற பாடலில் நோம் என்நெஞ்சே என்ற சொல் மூன்று முறை பயின்று வந்துள்ளதை காணமுடிகிறது. மேலும்,

**“அகவன் மகளே! அகவன் மகளே!**
**மனவுக் கோப்பு அன்ன நல்நெடுங் கூந்தல்**
**அகவன் மகளே! பாடுக பாட்டே**
**இன்னும், பாடுக, பாட்டே - அவர்**
**நல்நெடுங் குன்றம் பாடிய பாட்டே" (குறுந்:23)**

**“பார்ப்பன மகனே! பார்ப்பனமகனே!**
**செம்பூ முருக்கின் நல்நார் களைந்து**

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

**படிவ உண்டிப் பார்ப்பன மகனே!" (குறுந்:156)**

என்ற பாடல் அடிகளில் ‘அகவன் மகளே’ என்ற சொற்களும், ‘பார்ப்பன மகளே’ என்ற சொற்களும் மீண்டும் வந்துள்ளன.

**முடிவுரை**

தொல்காப்பியர் கூறிய வண்ணங்களில் தாஅவண்ணம், வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம், இயைபுவண்ணம், நெடுஞ்சீர் வண்ணம், குறுஞ்சீர் வண்ணம், சித்திரவண்ணம், நலிபு வண்ணம், ஏந்தல் வண்ணம் ஆகிய வண்ணங்கள் குறுந்தொகைப் பாடல்களில் பயின்று வந்துள்ளது.

**துணை நூற்பட்டியல்**

1.இளம்பூரணனார் - தொல்காப்பியம், பொருளதிகாரம் (மூலமும் உரையும்)

சாரதா பதிப்பகம், சென்னை - 14,

முதல் பதிப்பு - 2005,

16ம் பதிப்பு - 2019.

2.சிவன்பிள்ளை.தி - பிங்கல நிகண்டு (மூலமும் உரையும்)

முந்து தியலாஜிகல், யத்திரசாலை,முதல் பதிப்பு- 1890.

3.தமிழண்ணல் - சங்க இலக்கிய ஒப்பீடு (இலக்கியக் கொள்கைகள்),

மீனாட்சி புத்தக நிலையம்,

முதற்பதிப்பு - 2003, நான்காம் பதிப்பு - 2014.

4.பரிமாணம்,அ.மா. - குறுந்தொகை புத்தகம் - 1, 2 (மூலமும் உரையும்)
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 -பி, சிட்கோ,
இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர்,
சென்னை - 600098,
முதற்பதிப்பு - 2004.

5.பாவலரேறுபாலசுந்தரம்.-
தொல்காப்பியம்பொருளதிகாரம்செய்யுளியல்,
ஆராய்ச்சிக் காண்டிகையுரை,
பதிப்பாசிரியர் - பெ.மாதையன்,
பெரியார் பல்கலைக்கழகம்,
சேலம் - 6360011, முதல் பதிப்பு - 2012.

6.வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார் - தமிழ் இலக்கிய அகராதி,
சென்ட்ரல் புக் டிப்போ,11, பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, சென்னை - 5, 1957.

7.வெள்ளைவாரணன் க. - தொல்காப்பியம் செய்யுளியல் உரைவளம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை - 625021, முதற்பதிப்பு - 1989.